**சக்தி பௌண்டேஷன்,**

**தமிழ் CCC வகுப்பு**
**திருவாதிரை நன்நாள்**

அன்று அந்த வீட்டில் பெரிய கூட்டம் கூட ஆரம்பித்தது. சில நாட்களுக்கு முன்பிருந்தே அவ்வீட்டில் உள்ளவர்கள் வீட்டை சுத்தம் செய்வதும், காய்கறிகள் வாங்குவதும் என ஆளாளுக்கு ஒரு வேலையைச் செய்ய ஆரம்பித்தனர்.
அவ்வீட்டைச் சார்ந்த குடும்பங்களுக்கு ஃபோன் மூலம் அழைப்பு தரப்பட்டது.
எல்லாரும் கூடினர், காலை முதல் பெண்கள் வீட்டு வேலைகளை ஆரம்பித்தனர். அதில் பல கல்யாணம் ஆனவர்கள் வேறு விரதம். சிலர் வெறும் கூழையும் கோதுமை ரவா உப்புமாவையும் சாப்பிட்டு வேலைகளைச் செய்தனர்.
அனைத்தும் எதற்காக?
ஒரு சந்தோஷத்துக்காக!
சந்தோஷம்! எல்லாருக்கும் அது தானே வேண்டும். அது எப்போது வரும்? அவரவர் ஆசைகள் பூர்த்தி ஆகும் சமயத்தில் மனம் சந்தோஷத்தில் வானத்தில் இறக்கை கட்டிப் பறக்கும்.

”**அவன் பாரு சந்தோஷத்தால வானத்துல பறக்கறான்**” என்று கூறுவது உண்டு.

இந்த சந்தோஷம் வாழ்க்கை முழுதும் நீடிக்கவே பாரத நாட்டில் எத்தனை எத்தனை பண்டிகைகள்? சடங்குகள்? சப்ரதாயங்கள்?

அதில் ஒன்று தான் தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் மார்கழி மாதம் கொண்டாடப்படும் திருவாதிரைத் திருநாள்.

திருவாதிரை, இது சிவனுக்கு உரிய நட்சத்திரம். அன்று எல்லா சிவன் கோயில்களிலும் நடராஜருக்கு விடிய விடிய அபிஷேக ஆராதனை நடந்து மறுநாள் விடியலில் அவரது ஆனந்த தாண்டவக் காட்சி ”ஆருத்ரா தரிசனம்” என்று மக்களுக்குக் காட்டப்படுகிறது.பெண்கள் தங்கள் இல்லற வளத்துக்கும், தாலி பலத்துக்கும், ஆசைகளின் பூர்த்திக்கும் இப்படிகை கொண்டாடப் படுகிறது.

எதனால் இப்பண்டிகை ஏற்பட்டது?
தாருகாவனத்து முனிவர்கள் தாங்களே உலகில் சிறந்தவர்கள் என்ற ஆணவம் கொண்டு இருந்தனர். வேதங்களை ஓதி, அதில் கூறப்பட்ட சடங்குகளைச் சரிவரச் செய்தாலே போதும்; தெய்வ ஆராதனை தேவையில்லை என்ற மமதை அவர்களுக்குள் தலை தூக்கி இருந்தது. இதைத் தவறு என்று உணர்த்த சிவன் பிச்சாடனாராகச் சென்றார்.

அனைத்திற்கும் மூல காரணமான ஈசன் வந்தும் அந்த முனிவர்கள் புத்தி தடுமாறி, அவரை அழைக்க புலி ஒன்றையும், முயலகன் என்ற அரக்கனையும் ஏவினர்.

ஈசன் புலியைக் கொன்று, அதன் தோலை ஆடையாக உடுத்து, முயலகன் மீது தாவி ஏறி நின்று தன் தாண்டவத்தை ஆடினார். அதன் மூலம் படைத்தல் - காத்தல் - அழித்தல் என முத்தொழிலுக்கும் ஆதாரமாக தானே விளங்குவதை உணர்த்தினார். வேதவழி வழிபாட்டின் பலன் பூரண ஞானத்துடன் கூடியே பக்தியே என்றும் உணர்த்தினார்.

இந்த தாண்டவத்தையே பிற்காலத்தில் யோக சாஸ்த்ரத்தை அருளிய பதஞ்ஜலிமுனிவரும் வாக்பாதமுனிவரும் காண வேண்டி இன்றைய சிதம்பரத்தில் தவம் செய்தனர். ஈசனும் அதை நிறைவேற்ற எண்ணி அன்னை பார்வதியை மணம் செய்து கொண்டு ஆதிரை நட்சத்திரத்தன்று தன் ஆனந்த நடனக் கோலத்தைக் காட்டினார்.இதுவே இருவாதிரையின் புராணம் ஆகும்.

சரி நம் ஆசைகள், மனோரதங்கள் பூர்த்தியாவதற்கும் திருவாதிரைக்கும் என்ன சம்பந்தம்?
இந்த ப்ரபஞ்சம் முழுவதுக்கும் ஆதாரமான மூலப் பொருள் ஒன்று உள்ளது. அதுவே சிவ தத்துவம். அது எவ்வித மாற்றங்களுக்கும் உள்ளாகாதது. ஆனால் அதுவே நாம் காணும் அனைத்து பொருள்களுமாய் உருவாகி உள்ளது. இந்த ப்ரபஞ்சத் தோற்றத்துக்கும் அதில் ஏற்படும் மாற்றங்களுக்கும் ஆதாரமான சக்தியே பார்வதி.

சிவமானது சதா விழிப்புணர்வு நிலையிலேயே இருக்கிறது. சக்தியே சதா மாற்றங்களுக்கு ஆளாகிறது. இந்த ப்ரபஞ்ச சக்தி விழிப்புணர்வு நிலையிலேயே சதா இணைந்து இருப்பதே சிவபார்வதி கல்யாணம்.

நம் மனதில் உள்ள மனோசக்தி, உடல் - மனம் - அறிவு என்ற நிலைகளைக் கடந்து விழிப்புணர்வு நிலையை எட்டிவிட்டால் அந்த நிலையில் இருந்து நாம் வேண்டும் அனைத்தும் உடனே கிடைக்கும். இந்த விழிப்புணர்வு நிலைக்கு நம் மனோசக்தியை எடுத்துச் செல்வதற்காகவே பூஜைகள், சடங்குகள், விழாக்கள், வழிபாடுகள் என அனைத்தையும் முன்னோர்கள் ஏற்படுத்தி உள்ளனர்.

**சிதம்பரத்தில் திருவாதிரை:**
சிதம்பரம் கோயில் பஞ்சபூத ஸ்தலங்களில் ஆகாச ஸ்தலம் ஆகும். இங்கே ஈசன் பொன்னம்பலத்துள் ஆனந்த நடனம் ஆடுகிறார். இதன் விளக்கம் என்ன?

**சிதம்பரம் என்பதை சித் + அம்பரம் என்று பிரிக்கிறோம்**.
சித் என்றால் ஞானம்.
நம் ஜீவன் ஞானத்தையே ஆடையாக உடுத்தி இருக்கிறது என்று அர்த்தம்.

சரி ஈசன் பொன்னம்பலமாகிய சன்னிதியில் சிற்றம்பலத்தின் மீது ஆடுகிறார்.
முதலில் பொன்னம்பலம் என்றால் என்ன என்று பார்ப்போம்.

**பொன் + அம்பலம் = பொன்னம்பலம்**.
நமது உடல் தான் பொன்னம்பலம். கிடைப்பதற்கு மிகவும் அரிதான இந்த மனித உடலே பொன்னம்பலம். இதனுள் ஜீவன் வாழ்கிறது. பொன்னம்பலம் மனித உடல் போலவே தத்துவார்த்தமாக அமைக்கப்பட்டு இருக்கிறது. [ஒருநாளைக்கு மனிதன் விடும் சுவாச எண்ணிக்கையைக் குறிக்கும் 24000 தங்க ஓடுகள், மனித உடலில் உள்ள நரம்புகளைக் குறிக்கும் 72000 ஆணிகள் மற்றும் துவாரங்களைக் குறிக்கும் 9 கலசங்கள் கொண்டது பொன்னம்பலம்.]

நம் உடலுக்குள் உள்ள ஜீவன் ஞானத்துடன் மகிழ்ச்சியாக இருக்கும் நிலையே ஆனந்த தாண்டவம். மேலும் பூரண ஞானத்தால் நமக்கு விழிப்புணர்வு ஏற்படுகிறது. இதன் மூலம் நாம் எண்ணும் அனைத்தும் நிறைவேறுகின்றன. இந்த விழிப்புணர்வு நிறைந்த ஜீவனே சிற்றம்பலம்.

இந்த ப்ரபஞ்சம் முழுதும் மின்காந்த அணுக்களால் நிறைந்து உள்ளது. அந்த அணுக்கள் சதா அதிர்ந்தபடியே இருக்கின்றன. இதைக் குறியீடாக உணர்த்துவதும் நடராஜரின் தத்துவம் என்பர்.

**நடராஜரின் தோற்ற விளக்கம்:**
அவரது அபயக்கரம் "அஞ்ச வேண்டாம்" என்ற பக்தி தத்துவத்தையும் பஞ்சபூதங்களையும்

உணர்த்துகிறது. அவரது இடது கரம், தூக்கிய இடது காலைக் காட்டியபடி இருக்கிறது. சரணாகதி செய்யும் போதே விழிப்புணர்வு பெறும் ஞானத்துக்கு நாம் உயர்த்தப்படுகிறோம் என்பதை இது உணர்த்துகிறது.

முயலகன் மீது அவர் மிதித்தநிலையில் ஆடுவது, நம் ஆணவத்தை அடக்குவதைக் குறிக்கும். உடுக்கை ஒலி சக்தியையும் படைத்தல் தொழிலையும் குறிக்கும். தீச்சுடர் ஒளி சக்தியையும் அழித்தல் தொழிலையும் உணர்த்தும்.

நடராஜரைச் சுற்றி உள்ள தீச்சுடர்களுடன் கூடிய வளைந்த திருவாட்சி ப்ரபஞ்சம் சக்தியால் நிறைந்துள்ளதைக் குறிக்கும்.

இந்த தத்துவங்கள் அனைத்தையும் தூய பக்தி மூலம் அறிந்து விழிப்புணர்வு நிலைக்கு உயர்த்தப்பட்ட

இத்தகைய தத்துவங்களை எல்லாம் உணர்ந்து திருவாதிரை நாளில் நடராஜரையும் சிவகாமி அம்மையையும் வழிபடுவோர்க்கு வாழ்வில் அனைத்தும் கிடைக்கும் விழிப்புணர்வு பெறுவதன் மூலம்.

இந்த நன்நாளில் முடிந்த வரை "ஓம் நமசிவாய" என்று ஜெபியுங்கள். சிவ வழிபாட்டு ஸ்தோத்ரங்கள், தேவார திருவாசகப் பதிகங்கள், லலிதா சகஸ்ரநாமம் போன்ற ஸ்துதிகளை மனதார வாயாறப் பாடுங்கள்.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேனியன்
அலகில் சோதியன் அம்பலத்தே ஆடுவான்
மலர்ச் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்!

குனித்த புருவமும் கொவ்வைச் செய்வாயில்
குமின் சிரிப்பும் பணித்த சடையும்
பவளம் போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்தமுடன் எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்த பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே!